NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை - நவம்பர் 2016**

**வணக்கம்,**

நூலக நிறுவனத்தின் 2016 நவம்பர் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 2640 | 41352 |
| கையெழுத்துப் பிரதி | 05 | 79 |
| பக்கம் சிதைந்தவை | 08 | 100 |
| மேம்படுத்தல்கள் | 04 | 220 |
| பக்கம் தவறியவை | 76 | 940 |
| புகைப்படவாக்கம் | 02 | 495 |
| மொத்தம் | 2,729 | 42,471 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 256 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ஆவணங்களின் முக்கியத்துவம் உணர்ந்து பக்கங்கள் சிதைந்த, தவறிய ஆவணங்களும் மின்வருடப்பட்டன
- மின்வருடும் போது உடையும் ஆவணங்கள் புகைப்படக் கருவி மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- இம்மாதம் 473 ஆவணங்களிற்கு நிர்வாக விபரத்தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது.
- இதழியல் தேடலினை இலகுபடுத்துவற்காக முன்னெடுக்கப்படும் அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் இம்மாதம் 86 பத்திரிகைகளிற்கான குறிப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

ஆவணவாக்கலில் ஆசிரியர்கள் மற்றும் பதிப்பாளர்களான தில்லைநாதன், சௌந்தரராஜன், கமலாம்பிகை, சாந்தன் சத்தியகீர்த்தி, அருட்தந்தை தமிழ்நேசன், மயிலங்கூடல் நடராசன் ஆகியோரின் சேகரிப்புக்களும், வெளியீடுகளும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- நவம்பர் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.
    - **வெளியீட்டாளர்கள்**
        - கலை அருவி (மன்னா)
        - தமிழன் 24
        - அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
        - சித்திவிநாயகர் நூல்நிலையம்
    - **எழுத்தாளர்கள்**
        - அன்ரனி பாலதாஸ்
        - மோசஸ் சாந்தன் சத்தியகீர்த்தி
        - கணபதி நடராஜா
        - கவிதா சந்திரகுமார்
        - கிருஷ்ணபிள்ளை நடராசா
        - ஜெயலக்சுமி இராசநாயகம்
        - ரஜினிதேவி சிவலிங்கம்
        - கந்தையா சுகந்தா
        - இராசதுரை கணேசராசா
        - ஜெயவாணி செல்வகுமாரன்
        - முத்துக்குமாரசாமி இந்திராணி
        - ப.சீதால்ட்சுமி (ஜனகமகள் சிவஞானம்)
        - சின்னத்தம்பி ஈஸ்வரலிங்கம்

**வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்**

வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் முன்னர் உள்ளிடப்பட்டிருக்கும் ஆளுமை விபரங்களில் மேலதிக விபரங்களை இணைக்கும் பணி இம்மாதம் இடம்பெற்றது.

**வரவு செலவு அறிக்கை**

- நவம்பர் மாதத் தேவைகளுக்காக ரூ. 352,552.23 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 280,275.00, உபகரணச் செலவுகள் 13,750.00, வாடகை 21,101.00, மின்சாரம் 6,446.00, தொலைபேசி மற்றும் இணையம் 10,265.23, மற்றும் ஏனைய செலவுகள் 20,715.00 ஆகியன உள்ளடங்குகின்றன.
- நவம்பர் மாதம் ஐக்கிய இராச்சிய அன்பர்கள் மூலம் 369,000.00 ரூபாவும் அவுஸ்திரேலிய அன்பர்கள் ஊடாக 20,000.00 ரூபாவும் இலங்கையில் இருந்து 1000.00 ரூபாவும் ரூபாவும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.